1982 மார்ச் 25]

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சிப் பண்ணைக்கு மேய்ச்சல் நிலம் கையகப்படுத்தப்பட்டும் அது பயன்படுத்தப்படாமல் இருந்து வருகிறது. எனவே, கிராமப் புறங்களில் ஊரக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் விவசாயிகளுக்கு ஆடு வாங்கக் கடன் வழங்குகிறபொழுது போதுமான ஆடுகளை அங்கேயிருக்கிற கூட்டுறவுச் சங்கங்களால் வழங்க முடியவில்லை. எனவே, இது போன்ற மேய்ச்சல் நிலங்களைப் பயன்படுத்தும் வகையில் இந்த ஆராய்ச்சிப் பண்ணைகளிலே ஆடு அபிவிருத்தித் திட்டத்தைச் செயல் படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது ஏற்கனவே செயல் பட்டு வருகிறது.

தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயத்திற்கு தொல்லை தரும் எலிகளை ஒழிக்கும் திட்டம்.

*வினா எண். 649—திரு. இரா. தாமரைக்கனி : திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்கு தொல்லை தரும் எலிகளை ஒழிக்கும் திட்டத்தை தீவிரப்படுத்தும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஒவ்வோர் ஆண்டும் தனித் திட்டத்தின் மூலம் ரூ. 69,000 செலவில் 60,000 ஏக்கரில் எலிகளை ஒழிக்க துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்தில் 60,000 ஏக்கருக்கு ஜிங்க் பாஸ்பைட், அலுமினியம் பாஸ்பைட், போரேட் 10 சதவீதம் குருணை முதலியவை 50 சதவீதம் மானிய விலையிலும், ஒரு எலியைப் பிடித்துக் கொல்ல ஊக்கப் பணமாக 10 பைசா வீதம் (2,00,000 எலிகளை பிடித்துக் கொல்ல) ரொக்கமாகவும் அளிக்கப்படும். மேற்கூறிய எலி கொல்லி மருந்துகள் விவசாய கிடங்குகளின் மூலம் வினியோகிக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, எலியைப் பிடிப்பதற்குள்ள காசு உயர்த்தப்படுமா ? மனிதர்கள் எலியைப் பிடிப்பதையே பாவமாகவும் கருதுகிறார்

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கள், இப்போது. எலியைப் பிடிப்பதற்கு ஆட்கள் சரியாக வராத காரணத்தால், அங்கங்கே அரசுச் செலவிலேயே எலியைப் பிடிக்க பாம்புப் பண்ணை வைக்கப்படுமா, என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உயர்த்த வேண்டிய நிலைமை நிச்சயமாக இல்லை. பாம்பு பண்ணை என்பது ஆபத்தான யோசனை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மனிதர்கள் உற்பத்தி செய்யும் தானியங்களில் 8-ல் 1 பங்கை எலிகள் தின்று விட்டதாக ஒரு கணக்கு முன்பு சொல்லப்பட்டது. எகிப்து நாட்டில் எலிகளின் தொல்லை ஒரு பெரிய தேசியப் பிரச்சினையாகி, எலிகளைப் பிடிக்க அமெரிக்காவின் உதவியை நாடும் நிலைமை ஏற்பட்டது. அதைப் போல், எலிகளைப் பிடிக்க உலக வங்கியினுடைய உதவியை அரசு நாடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதற்காக உலக வங்கியின் உதவியை நாடுவது மலையைக் கிள்ளி எலியைப் பிடிப்பது போலாகும்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எலித் தொல்லை தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகம் பூராவும் இந்த எலித் தொல்லைகளினால் மகசூல் பாதிக்கப்படுகிறது. ஆகவே, எலிகளை ஒழிக்கும் வகையில் எலி ஒழிப்பு வாரம் கொண்டாடப்படுமா ? அமைச்சர் அவர்கள் எலி வேட்டையாட வருவார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே. இதற்கென்று தனி வாரம் நாம் கொண்டாட வேண்டியதில்லை. எல்லா காலத்திலேயும் இந்த வேலை நடைபெற்று வருகிறது. அமைச்சர் இதில் நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையில்லை, துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பூராவிலும் இருக்கிற நெல் வயல்கள், இந்த எலித் தொல்லைகளினால் நெற்கதிர்கள் பாழடிக்கப்படுகின்றன. அதைப் பூரணமாக ஒழிக்க, நல்லமுறையிலே ஆராய்ச்சி செய்து, எந்தெந்த வகையில் அதை ஒழிக்க அமைச்சர் முயற்சி எடுப்பார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஏற்கனவே மூலக் கேள்விக்குச் சொல்லப்பட்ட பதிலிலேயே கூறப்பட்டதைப் போல், இப்பொழுதுள்ள முறைகளே எலிகளை ஒழிக்கப் போதுமானது. புதிதாக, எதுவும் தேவை இல்லை.

1982 மார்ச் 25]

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புலி வேட்டையிலே ஈடுபட்ட தமிழ்ப் பரம்பரை இன்றைக்கு எலி வேட்டையிலே ஈடுபட்டிருக்கிறது. இருக்கட்டும். அந்த எலிகள் ஏதாவது ஒரு பொருளைச் சாப்பிட்டால் மலடு ஆகும் வகையில் அந்த இலாக்கா ஆராய்ச்சி செய்யுமா ? அதாவது குடும்பக் கட்டுப்பாடு என்ற முறையில், ஆட்டோமேட்டிக்கலி அது சாப்பிடும் உணவின் மூலம் மலடாகும் முறையில் ஏதாவது ஆராய்ச்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அம்பிகாபதியும் ஏதாவது ஒத்துழைத்தால் அதிலே நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது ஒரு எலியைப் பிடித்துக் கொல்ல ஊக்கப்பணமாக 10 பைசா வீதம் அளிக்கப்படுவதாகவும், 50 சதவீதம் மானிய விலை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அது எந்த இலாக்காவின் மூலம் அளிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இந்த இலாக்கா மூலம்.

திரு. இ. முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, கிராமப்புறங்களில் வயல்களில் உள்ள எலிகளைப் பிடித்து அங்குள்ள மக்கள் உணவாகப் பயன்படுத்தி வருகிறார்கள். இப்படி எலிகளைக் கொல்லாமல் உயிரோடு பிடித்து நகர்ப்புறங்களில் விநியோகிக்கின்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இல்லை.

லே அவுட் அனுமதி பெறாமல் வீட்டுமனைகள் விற்பதை தடை செய்யும் திட்டம்.

*வினா எண். 650—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லே-அவுட் அனுமதி பெறாமல் வீட்டுமனைகள் விற்பதை அரசு தடை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமுலுக்கு வரும் ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS